No.C.11/2026 11.06.2026

# ஜூன் 26 : உலகப் போதை விழிப்புணர்வு நாள் கொண்டாட்டம் "போதையிலிருந்து நமது குழந்தைகளைப் பாதுகாப்போம்" நாள் : 28.06.2026

இயேசு கிறிஸ்துவில் அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே, நம் ஆண்டவர் இயேசுவின் அருளும் அமைதியும் உங்களோடு இருப்பதாக!

ஜூன் 26ஆம் நாள் என்றாலே நம் நினைவுக்கு வருவது உலகப் போதை விழிப்புணர்வு நாள்தான். கடந்த ஆண்டுகளில் 'மாணவர்களே! போதையல்ல நமது பாதை' மற்றும் 'போதையினின்று நலம் பெறும் குடும்பங்களின் கொண்டாட்டம்' என்ற கருத்தில், போதையிலிருந்து விடுபட்டு மகிழ்வுடன் வாழும் குடும்பங்களை உற்சாகப்படுத்தினோம். இந்நிகழ்ச்சி "போதையிலிருந்து விடிவு உண்டு" என்ற நம்பிக்கைச் செய்தியை நம் மாவட்ட மக்களுக்கு அளித்தது.

இந்த ஆண்டும் போதைசார் பணிகளைச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கும் நமது கோட்டாறு மறைமாவட்ட போதைநோய் நலப்பணியினருடன் (திருப்புமுனை) ஆற்றுப்படுத்துதல் பணிக்குழு, இயேசுசபை போதைநோய் பணிக்குழுவினரும், காணிக்கை மாதா புதுவாழ்வு இல்லத்தினரும் இணைந்து மாவட்ட அளவில் "போதையிலிருந்து நமது குழந்தைகளைப் பாதுகாப்போம்" என்னும் கருத்தில் வரும் ஜூன் 26ஆம் தேதியைச் சிறப்பிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

அன்றைய நாள் நமது குமரிமாவட்ட மக்கள் (இளைஞர்கள்) பங்கெடுக்கும் போதை விழிப்புணர்வு ஜோதி ஓட்டம் 32 இடங்களிலிருந்து காலை 6:00 மணிக்குத் தொடங்கி 9:30 மணிக்கு அண்ணா விளையாட்டு அரங்கம், நாகர்கோவிலில் நிறைவுபெறும். உள்ளம் தொடும் பொதுநிகழ்ச்சிகள் குமரிமாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட அரசு அதிகாரிகள் முன்னிலையில் காலை 9.30 மணியிலிருந்து 11.30 மணிவரை நடைபெறவிருக்கிறது.

இதன் மைய நிகழ்வாக, நமது மாணவர்களும் மற்றும் குடும்பத்தினரும் தங்கள் வீட்டில் தந்தை அல்லது சகோதரர் அன்று குடித்துக் கொண்டிருந்தபோது அனுபவித்த வேதனைகளையும், இன்று குடிப்பதை நிறுத்திய பின்பு ஏற்பட்டுள்ள மனமகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வார்கள். அவர்களை ஊக்கப்படுத்தி சிறப்பு நினைவுப் பரிசுகள் வழங்கப்படும்.

மேலும் எதார்த்தத்தை எடுத்துக்காட்டும் நாஞ்சில் நாதமும் திருப்புமுனையும் ஆற்றுப்படுத்தல் பணிக்குழுவும் இணைந்து தயாரித்து வெளியிடுகின்ற "மீட்சி" என்ற குறுந்தகடு வெளியிடப்படும். இந்த எழுச்சியூட்டும் விழிப்புணர்வு கொண்டாட்டத்தில் நமது மறைமாவட்ட இளைஞர்களும் பெரியவர்களும் முழுமையாகப் பங்கெடுத்து பயன்பெறுமாறு அன்புடன் அழைப்பு விடுக்கின்றேன்.

போதைக் கலாச்சாரம் நமது குடும்பங்களையும் மக்களையும் நிலைகுலையச் செய்கின்றதை நாம் அறிவோம். இதை மனத்தில் கொண்டு நமது மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளிலும் வருகின்ற ஜூன் 28 ஆம் தேதி "போதையிலிருந்து நமது குழந்தைகளைப் பாதுகாப்போம்"என்ற மையச்சிந்தனையில் திருப்பலியைச் சிறப்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன். இச்சிறப்பு வழிபாட்டுக்கான முன்னுரைகள், மன்றாட்டுக்கள் இத்தோடு இணைத்து அனுப்பப்படுகின்றன.

**மேலும்:**

நமது மறைமாவட்டத்தில் செயல்படும் போதைநோய் நலபணிக்குழு (திருப்புமுனை) அலுவலகமானது ஞாயிறு தவிர மற்ற அனைத்து நாட்களும் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை செயல்படும். தேவைப்படுகிறவர்கள் அலுவலகத்தை அணுகி பயன்பெறலாம்.

**தகவலுக்கு :**

போதைநோய் நலப்பணிக்குழு (திருப்புமுனை)

ஆயர் இல்லம்

தொலைபேசி எண் : 04652 – 238425

அலைபேசி எண்கள் : 9384834498, 9841039497

நலமெல்லாம் நல்கிடும் நம் இறைவன் எல்லாரும் போதையற்ற நல வாழ்வு வாழ அருள் புரிவாராக!

*கிறிஸ்துவின் மனநிலையில்,*

Sd/-

**ஆயர் நசரேன் சூசை** (கோட்டாறு மறைமாவட்டம்)

---

**பின்குறிப்பு:**
1. இந்தச் சுற்றறிக்கை நமது மறைமாவட்ட ஆலயங்களிலும் நிறுவனங்களிலும் ஜூன் 21ஆம் நாள் ஞாயிறு திருப்பலியில் வாசிக்கப்பட வேண்டும்.
2. இந்நாளை நமது பங்கில் உள்ள இளம் மாணவர் இயக்கம் சிறப்பிக்கவும்